இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

இயேசு தமது சொந்த ஊருக்கு வந்தார். அவருடைய சீடரும் அவரைப் பின்தொடர்ந்தனர். ஓய்வு நாள் வந்தபோது அவர் தொழுகைக்கூடத்தில் கற்பிக்கத் தொடங்கினார். அதைக் கேட்ட பலர் வியப்பில் ஆழ்ந்தனர். அவர்கள், "இவருக்கு இவையெல்லாம் எங்கிருந்து வந்தன? என்னே இவருக்கு அருளப்பட்டுள்ள ஞானம்! என்னே இவருடைய கைகளால் ஆகும் வல்ல செயல்கள்! இவர் தச்சர் அல்லவா! மரியாவின் மகன்தானே! யாக்கோபு, யோசே, யூதா, சீமோன் ஆகியோர் இவருடைய சகோதரர் அல்லவா? இவர் சகோதரிகள் இங்கு நம்மோடு இருக்கிறார்கள் அல்லவா?" என்றார்கள். (மாற்கு 6:1-3)

# இளைஞர்களே, உங்கள் உறுதிப்பாட்டிலும் நம்பிக்கையிலும் நிலைத்திருங்கள்!

## திருத்தந்தை அறிவுறுத்து

**வத்திக்கான்: இளைஞர்களே,** நீங்கள், எப்பொழுதும் உங்கள் உறுதிப்பாடுகளில் உண்மையாக இருங்கள், மற்றவர்கள் உங்களைத் துன்புறுத்தினாலும் உங்கள் அடையாளத்தில் உண்மையாக இருங்கள், துன்புறுத்தப்பட்ட கிறிஸ்தவ மறைசாட்சியர் போல பலம்பொருந்தியவர்களாக இருங்கள் என்றும் கூறினார் திருத்தந்தை பிரான்சிஸ்.

கடந்த ஜூன் 20, வியாழனன்று, சிகாகோவிலுள்ள இலயோலா பல்கலைக் கழகம் மற்றும் இலத்தீன் அமெரிக்காவிற்கான பாப்பிறை அமைப்பால் ஏற்பாடு செய்யப்பட்ட நேரடி ஒலிபரப்பில் "ஆசியா பசிபிக் முழுவதும் உறவுப் பாலங்களைக் கட்டியெழுப்புதல்" என்ற தலைப்பில் மாணவர்களுடன் கலந்துரையாடியபோது இவ்வாறு தெரிவித்தார் திருத்தந்தை.

சமுதாயத்திற்கு நாம் சொந்தமானவர்கள் என்பதை நீங்கள் உணரவேண்டுமெனவும், அதுவே நமக்கான பாதுகாப்பையும் நமது மனித மாண்பையும் உயர்த்துகிறது எனவும் குறிப்பிட்ட திருத்தந்தை, இன்றைய இளையயோர் மிகவும் எளிதில் பாதிக்கப்படக்கூடியவர்களாக இருக்கின்றனர் என்றும், அதிலிருந்து நீங்கள் வெளியே வர முயற்சிக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.



*இளைஞர்களில் அகமகிழும் திருத்தந்தை*

மேலும் மனநலம், பாகுபாடு, களங்கம் மற்றும் அடையாளம் ஆகியவற்றைக் குறித்துப் பேசிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், சான்று பகிரவும், அச்சான்றை வாழ்வாக்கவும் கேட்டுக்கொண்டதுடன், தங்களின் சொந்த அடையாளத்தை இழக்காது, இளையோர் ஒருவருக்கொருவர் ஒத்துழைப்பு நல்கிடவும், ஒன்றிப்புடன் வாழ்ந்திடவும் விண்ணப்பித்தார்.

ஒருவரின் மனித மாண்பை குறைத்து மதிப்பிடும் அனைத்துத் தவறான செயல்பாடுகளையும் கண்டித்த திருத்தந்தை, சில வேளைகளில் பெண்கள் இரண்டாம் தர குடிமக்களாகக் கருதப்படுகிறார்கள் என்றும், இது உண்மையல்ல என்றும் அனைவருக்கும் நினைவூட்டினார்.

பெண்களின் மகத்துவத்தை மறக்கக் கூடாது என்றும், பெண்களின் நுண்ணறிவு மற்றும் சமூகத்தை கட்டியெழுப்பும் திறனின் அடிப்படையில் ஆண்களை விட பெண்கள் சிறந்தவர்கள் என்று எடுத்துக்காட்டிய திருத்தந்தை, பெண்களின் தனித்துவமான சிறப்பு பண்புகள் மற்றும் திறமைகளையும் பாராட்டினார்.

மற்றவர்களுக்கு நெருக்கத்தையும் அன்பையும் காட்டுமாறும், ஒருபோதும் அவர்களை ஒதுக்கிவைக்க வேண்டாம் என்றும் மாணவர்களுக்கு அழைப்புவிடுத்த திருத்தந்தை, பிலிப்பீன்சில் அதிக எச்.ஐ.வி விகிதத்தையும் பாலினத்தையும் பற்றி குறிப்பிட்ட ஒரு மாணவரின் வார்த்தைகளை நினைவு கூர்ந்த அவர், ஒதுக்கீடு இல்லாமல், அனைத்து மக்களுக்கும் சிகிச்சையளிக்கவும் உதவவும் உடல்நலப் பராமரிப்புத் (health care) தயாராக இருப்பதை உறுதி செய்ய வேண்டும் என்றும் கூறினார்.

*செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்*

# தைப்பிங், புனித பிரகாசியார் பங்கில் 'குடும்பம் கடவுளின் ஆலயம்' கருத்தரங்கு

**தைப்பிங்:** கடந்த 8.6.2024 அன்று இங்குள்ள புனித பிரகாசியார் (லூயிஸ்) பங்கில் 'குடும்பம் கடவுள் வாழும் ஆலயம்' (1:கொரி 3:16) எனும் கருப்பொருளில் கருத்தரங்கு ஒன்று ஏற்பாடு செய்யப்பட்டது.

இதில் சிறப்புச் சொற்பொழிவாளராக இறைஇரக்கத்தின் தியான மையம், எலாவூர், இந்தியாவைச் சேர்ந்த அருள்பணி வர்கீஸ் அவர்கள் வழிநடத்தினார். காலை 9.00 மணி முதல் 3.00 மணி வரை நடைபெற்ற இக்கருத்தரஙகில் ஏறக்குறைய 350 மக்கள் பங்கேற்றனர் என்பது குறிப்பிடத் தக்கது.

அன்று, 'கடவுள் அன்பினால் குடும்பத்தை ஒன்றிக்கச் செய்தல்', 'குடும்பத்தில் ஒருவரை ஒருவர் ஒப்புரவாகுதல்', 'சிறு குடும்பம் நம் குடும்பத்திற்கு முன்மாதிரியும் சாட்சியுமாகும்' என்ற துணை கருப்பொருள்களில் கருத்தரங்கு தூய ஆவியாரின் துணையோடு வழிநடத்தப்பட்டதோடு, கலந்து கொண்டோரின் கவனத்தை வெகுவாக ஈர்த்தது. கருத்தரங்கின் இறுதிப் பகுதியில் குணமளிப்பு இறைவேண்டலும் திருப்பலியும் கொண்டாடப்பட்டது. தூய ஆவியாரின் ஒன்றிப்பில் பங்கேற்றோர் இறையாசீர் பெற்று புத்துணர்ச்சியோடு இல்லம் திரும்பினர்.



அருள்பணி வர்கீஸ் அவர்களுடன் ஏற்பாட்டுக் குழுவினர்

இக்கருத்தரங்கிற்கு ஏற்பாடு செய்த தமிழ் திருத்தூது பணிக்குழு இக்கருத்தரங்கிற்கு உதவிய பினாங்கு மறைமாவட்டத்தின் கத்தோலிக்க அருங்கொடை மறைமாவட்ட குழுவினருக்கும் கருத்தரங்கு சிறப்புற முழு




ஆதரவையும் ஒத்துழைப்பும் வழங்கிய பங்கு தந்தை அருட்திரு ஸ்தீவன் லியூ அவர்களுக்கும் நன்றி கூறப்பட்டது.

*-கிறிஸ்தோபர் தைப்பிங்*

# கூலிம், திரு இருதய ஆண்டவர் பங்கில் உறுதிப்பூசுதல் முகாம் நடைபெற்றது

கூலிம் : கடந்த 8.6.24 அன்று, இங்குள்ள திருஇருதய ஆண்டவர் பங்கின் உறுதிப் பூசுதல் மாணவர்களுக்கான சிறப்பு மறைக்கல்வி முகாம் நடைபெற்றது.



முகாமில் பங்கேற்ற உறுதிப்பூசுதல் மாணவர்களும் பெற்றோர்களும்

இப்பயிற்சியில் 7 மறைக்கல்வி மாணவர் களும் பெற்றோர்களும் கலந்து கொண் டனர்.

வடமறை மாவட்ட மறைக்கல்வி ஒருங் கிணைப்பாளர் திரு. பிரான்சிஸ் அந்தோணி அவர்கள் 'உறுதிப்பூசுதல் அருளடையாளம் பெற்றதும் என் கூடாரத்தை எவ்வாறு விரிவாக்குவேன்' எனும் தலைப்பில் மாணவர்களுடன் கலந்துரையாடியது சிறப்பாக அமைந்தது.

பங்கு தந்தை ஹென்றி ராஜூ அவர்கள் அருளடையாளங்கள் பற்றியும், சகோதரர் நிக்கோலஸ் குடும்பத்திற்கும்'பங்கிற்கும் செய்யப்படவிருக்கும் கடமைகள் பற்றியும். சகோ. ஜோன் தோமஸ் தலையான பாவங்களும் விளைவுகளும் பற்றியும் பகிர்ந்துகொண்டனர்.

சபாவை சேர்ந்த அருட்சகோதரர் மஜுரி அவரின் இறையழைப்பை சாட்சியாக பகிர்ந்தார். நிறைவாக, பெற்றோர்களுக் கான சந்திப்பும் குடும்பக் கூடாரத்தில் அன்பை எவ்வாறு விரிவாக்குதல் குறித்து சகோதரி விமலா தோமஸ் சிறப்பாக விளக்கினார். இந்த ஒருநாள் முகாம் இறை ஆசியுடன் மாலை 6.30 மணிக்கு முடிவடைந்தது.

மேற்கண்ட முகாம் எல்லா விதத்திலும் மிகவும் சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய பங்குத்தந்தை ஹென்றி ராஜூ அவர்களுக்கும், மறைக்கல்வி ஒருங் கிணைப்பாளர், ஆசிரியர்கள் மற்றும் சொற்பொழிவாளர்கள், இசைக்குழுவினர் அனைவருக்கும் நன்றி நவிலப்பட்டது.

-ஜேன் சந்தனசாமி

**கடவுள் நமக்கு ஆற்றியுள்ள வியத்தகுச் செயல்களை நமக்கு மீண்டும் எடுத்துரைத்து, இறைவனுடன் ஆன அன்புறவை புதிதாக சுவைக்க வைத்துக் குணப்படுத்துகிறது விவிலியம்**



# 'போதைப்பொருள் பயன்பாட்டிற்கு எதிரான நாள்'

## திருத்தந்தையின் செய்தி சுருக்கம்

ஒவ்வோர் ஆண்டும் ஜூன் மாதம் 26ஆம் தேதி, "போதைப்பொருள் தவறாக பயன்படுத்தப்படல், மற்றும் சட்டவிரோத கடத்தல்களுக்கு எதிரான அனைத்துலக நாள்" உலகம் முழுவதும் சிறப்பிக்கப் படுவதையொட்டி திருத்தந்தையின் இப்புதன் மறைக்கல்வியுரை இருந்தது. முதலில் புனித பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதல் திருமடலில் இருந்து ஒரு பகுதி பல்வேறு மொழிகளில் வாசிக்கப் பட்டது.

"எல்லாவற்றையும் செய்ய எனக்கு உரிமையுண்டு"; ஆனால், எல்லாம் நன்மை தரக்கூடியவையல்ல. "எல்லாவற்றையும் செய்ய எனக்கு உரிமை உண்டு"; ஆனால், எதற்கும் நான் அடிமையாகிவிட மாட் டேன். "வயிற்றுக்கென்றே உணவு, உணவுக்கென்றே வயிறு." இவை இரண்டையுமே கடவுள் அழித்து விடுவார். உடல் பரத்தைமைக்கு அல்ல, ஆண்டவருக்கே உரியது. ஆண்டவரும் உடலுக்கே உரியவர். ஆண்டவரை உயிர்த்தெழச் செய்த கடவுள் தம் வல்லமையால் நம்மையும் உயிர்த்தெழச் செய்வார் (1 கொரி 6:12-14). இப்பகுதி வாசித்தளிக்கப்பட்டத்தைத் தொடர்ந்து திருத்தந்தையின் சிந்தனைப் பகிர்வுகள் இடம்பெற்றன.

அன்பு சகோதரர்களே, சகோதரிகளே, காலை வணக்கம்.

1987ஆம் ஆண்டு ஐ.நா. அவையால் உருவாக்கப்பட்ட, "போதைப்பொருள் தவறாக பயன்படுத்தப்படல், மற்றும் சட்டவிரோத கடத்தல்களுக்கு எதிரான அனைத்துலக நாள்" இன்று நினைவு கூறப்படுகிறது. "ஆதாரங்கள் தெளிவாக உள்ளன : தடுப்பு நடவடிக்கைகளில் முதலீடுச் செய்வோம்" என்பது இவ்வாண் டின் இந்நாளுக்கான தலைப்பாக எடுக்கப்பட்டுள்ளது. புனித திருத்தந்தை ஜான் பால் அவர்கள் வலியுறுத்துவதுபோல், "போதைப்பொருள் பயன்பாடு என்பது, அதை பயன்படுத்தும் ஒவ்வொரு சமூகத்தையும் வறுமைக்கு உள்ளாக்கு கிறது. இது மனிதகுல வலிமையையும், தார்மீகத் திறனையும் குறைக்கிறது. இது உயர் மதிப்பீடுகளைக் குறைத்து மதிப்பிடுகின்றது. வாழ்வதற்கும், நல்சமுதா யத்தைக் கட்டியெழுப்புவதற்கும் இருக்கும் விருப்பார்வத்தை இது அழித்து ஒழிக் கின்றது". அதேவேளை, போதைப் பொருளுக்கு அடிமையாயிருக்கும் ஒவ் வொருவருக்கும் ஒரு தனிப்பட்ட கதை உள்ளது. அதற்கு செவிமடுக்கவும், அதனைப் புரிந்துகொள்ளவும், அவர்களை அன்புகூரவும், முடிந்தவரையில் குணப் படுத்தி தூய்மையாக்கவும் நாம் முன்வர வேண்டும். ஏனெனில், அவர்கள் ஒவ்வொருவரும், எக்காலத்திலும், தற் போதும், கடவுளின் குழந்தைகளுக்குரிய மாண்பைக் கொண்டுள்ளனர்.

இருப்பினும் நாம் போதைப்பொருள் வியாபாரிகள் மற்றும் கடத்துவோரின் தீய எண்ணங்களையும் தீச்செயல்களையும் புறந்தள்ளிவிட முடியாது. திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட் அவர்கள், நோயாற்றும் குழு ஒன்றை சந்திக்கச் சென்றபோது பயன்படுத்திய கடுமையான வார்த்தை களை இப்போது நினைவு கூர்வோம். "சமூகத்தின் அனைத்து நிலைகளிலும் உள்ள எண்ணற்ற இளையோர் மற்றும் வயதுவந்தோரின் வாழ்வுக்கு எவ்வளவு பெரிய தீமையை ஆற்றியுள்ளார்கள் என்பதை போதைபொருள் வியாபாரிகள் எண்ணிப்பார்க்க வேண்டும் என அவர்களை விண்ணப்பிக்கின்றேன். உங்களின் செயல்களுக்கு கடவுள் முன் நீங்கள் பதிலுரைக்க வேண்டியிருக்கும். நீங்கள் செய்வது போன்ற வழிகளில் மனித மாண்பு ஒரு நாளும் மிதிபடக் கூடாது" என்றார் திருத்தந்தை 16ஆம் பெனடிக்ட். போதைப்பொருள் பயன்பாடு மீதான கட்டுப்பாடுகளை அகற்றுவதன் வழியாக போதைப்பொருள் அடிமைத்தனத்தை ஒழிக்க முடியும் என்ற பரிந்துரையாலோ, அல்லது சிலநாடுகளில் அக்கட்டுப்பாடு களை நீக்கியுள்ளதாலோ இப்பிரச் சனைக்குத் தீர்வு காணமுடியாது.

போதைப்பொருளுக்கு அடிமையானோர் மற்றும் அவர்களின் குடும்பங்களின் துயரக் கதைகளைக் கேட்கும்போது, இந்த அபாயகரமான பொருளின் உற்பத்தி மற்றும் கடத்தலைத் தடுக்க வேண்டியது நமது ஒழுக்கரீதி சார்ந்த கடமை என்பதில் உறுதியாக இருக்கிறேன்.

அன்பு சகோதரர்களே, சகோதரிகளே, உலகம் முழுவதும் பல இலட்சக்கணக்கான மக்கள் போதைப்பொருள் அடிமைத் தனத்திற்கு உள்ளாகியிருக்கும் நிலை யையும், போதைப்பொருள் தயாரிப்பு மற்றும் கடத்தல் என்ற பெரும் தவற்றையும் பார்க்கும் நாம் இது குறித்து பாராமுகமாய் இருக்க முடியாது.

# அடுத்தவரை நிராகரிப்பதும் புறக்கணிப்பும் சீடத்துவத்தைச் சீரழிக்கும்!

இன்று பொதுக்காலம் 14ம் ஞாயிறு. இன்றைய முதல் வாசகம், எசேக்கியேல் இறைவாக்கினர் இஸ்ரயேல் மக்களிடம் கடவுளால் அனுப்பப்படுகிறார். ஆனால், இஸ்ரயேலர் கடவுள் அனுப்பிய இறைவாக்கினர்களை ஏற்றுக்கொள்ள மனம் இல்லாதவர்களாக இருந்ததை வாசகம் விவரிக்கிறது.

இரண்டாம் வாசகத்தில் திருத்தூதர் பவுல், தனது வலுவின்மையில் கடவுளின் வல்லமையைக் காண்பதாக எடுத்துரைக் கிறார். ஆண்டவரின் வெளிப்பாடுகளால் இறுமாப்பு அடையாமல் இருக்குமாறு தனக்கு இந்த துன்பம் வழங்கப் பட்டிருப்பதாக அவர் ஏற்றுக்கொள்கிறார்.

மேற்கண்ட இரு வாசகங்களின் எதிரொலிப்பில் இன்றைய நற்செய்தியை வாசிக்கும்போது, இயேசு தம் சொந்த ஊர் மக்களால் புறகணிக்கப்படுவதை மாற்கு விவரிக்கிறார். இயேசு சொந்த ஊருக்கு வந்தபோது ஊர் மக்கள் இயேசுவின் ஞானத்தைக் கண்டு வியப்பில் ஆழ்ந்தார் கள். என்னே இவருக்கு அருளப்பட்டுள்ள ஞானம்? இவர் தச்சர் அல்லவா? மரியாவின் மகன்தானே!" என இயேசுவின் குடும்பச் சூழ்நிலையை, அவரின் வாழ்க்கைப் பின்னணியைப் பற்றி விமர்சிக்கின்றனர்.

மனித அனுபவங்களிலேயே மிக ஆழமான காயங்களை உருவாக்குவது நிராகரிப்பு, புறக்கணிப்பு. அதிலும், காரணங்கள் எதுவும் இல்லாமல், அல்லது, நமக்குப் புரியாத காரணங்களுக்காக நாம் புறக்கணிக் கப்படும்போது, அந்த வேதனை மிகக் கொடுமையாக இருக்கும். தன் சொந்த ஊரிலேயே இறைமகன் இயேசு பிறக்கணிக்கப்படுகின்றார்.

மத்தேயு அவரது நற்செய்தியில், திருமுழுக்கு யோவான் வந்தபோது, அவர் உண்ணவு மில்லை, குடிக்கவுமில்லை. மக்கள் அவரை பேய்பிடித்தவன்" என்றனர். மானிடமகன் வந்துள்ளார், அவர் உண்கிறார், குடிக் கிறார், இவர்களோ, இம்மனிதன் பெருந் தீனிக்காரன், குடிகாரன், பாவிகளுக்கும், வரிதண்டுபவர்களுக்கும் நண்பன்" என் கிறார்கள்.(மத்,11:19) இப்படியாக மக்கள் எதையும் ஆழ்ந்தறியாமல் விமர்சிப்பது வழக்கமான ஒன்றாகிவிட்டது. இன்றும், ஒருவரின் குடும்பச் சூழ்நிலை, அவரின் வாழ்க்கைப் பின்னணி இவற்றைக் கொண்டு எடைபோடுதல் இயல்பாகி விட்டது இந்த



உலகம் எதையும் யாரையும் விட்டுவைக்காது. குறை கூறிக்கொண்டே தான் இருக்கும். 'பொருள் இருந்தால் வந்து கூடும் அதை இழந்தால் விலகி ஓடும் இதுதான் உலகமடா மனிதா இதுதான் உலகமடா' என்று ஒலித்த ஒரு திரைப்படப் பாடல் நினைவுக்கு வருகிறது.

இறைவாக்குப் பணியை மனவுறுதியோடு செய்யவேண்டும் என்பதை நினைவில் கொண்டு செயல்பட இன்று அழைக்கப் படுகிறோம், நிராகரிப்பும் புறக்கணிப்பும் நம் உறவு வாழ்வைச் சிதைத்துவிடும் என்பதை நினைவில் கொள்வோம்.

-ஆர்.கே.

**பொதுக்காலம்-14-ஆம் ஞாயிறு**

| | |
|---|---|
| முதல் வாசகம் | எசே 2:2-5 |
| திரு.பாடல் | 123: 1. 2. 3-4 |
| 2-ம் வாசகம் | 2 கொரி 12: 7-10 |
| - நற்செய்தி | மாற்கு 6:1-6 |

**ஞாயிறு வாசகம் ஆண்டு 2 (B)**
**வாரநாள் முதல் வாசகம் -ஆண்டு 2**
**திருப்புகழ் மாலை- வாரம் 2**